274

4-21

த்ம-வித்யா-சாதனம்.

1931

[4-அணா

R6
N24
184363

ஓம்.

பந்தன்—முக்தன்.

சம்சாரிக்கு பக்தி அவசியம்.

முதல் அத்தியாயம்.

பந்தன்—நான் மாறாத சுகத்தையடைய, இலகுவான வழி யென்ன?

முக்தன்—பக்திதான் சுலபமான வழி.

ப. பக்தி யென்பது என்ன?

மு. பக்தி யென்பது கடவுளைப்பூஜித்தல், அல்லது அவரிடத்தில் அன்பு செலுத்தல் என்பதாகும்.

ப. கடவுள் இருக்கிறார் என்ற நிச்சய புத்தி யேற்படவில்லையே. உலகத்தில் எங்கும் அநியாயங்களும் அகிருத்தியங்களும் நிறம்பி யிருக்கின்றன. அவற்றால் துரோதம் யுத்தம் சச்சரவுகள் நிகழ்ந்து வருகின்றன.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
184363
சென்னை 600 008

நாம் அவற்றில் சம்பந்தப்படாமல் இருக்கமுடியவில்லை. அந்த சம்பந்தத்தால் சரீரத்திற்கும் மனத்திற்கும் துன்பம் உண்டாகிறது. கடவுள் ஒருவர் இருப்பின் இவ்வித துக்கங்கள் சம்பவிக்க அவர் என் பார்த்திருக்கிறார்? எல்லோரையும் சுகமாகவாழச்செய்ய அவருக்கு சக்தியில்லையா? ஒரு புருஷன் சர்வசக்தி யுள்ளவனாயினும், எண்ணிறந்த ஜீவகோடிகளையும், மண்டலங்களையும், சிருஷ்டித்திருக்க முடியுமா? துக்கமயமான இவ்வுலகங்களை அவர் ஏன் சிருஷ்டிக்கவேண்டும்; சிருஷ்டி இல்லாது சும்மா இருந்திருக்கலாகாதா?

மு. எலெக்டிரிஸிட்டி என்ற மின்சாரம் முயற்சியின்றிக் கண்டுபிடிக்கப்பட்டதா? கண்டுபிடிக்குமுன் அது இல்லாதிருந்ததா, மேகங்களின் சந்திப்பினால் மின்சாரம் உண்டாகி இடியும் மின்னலும் இல்லாதிருந்தனவா? கடவுளைக் கண்டுபிடிக்க முயற்சித்தால் கட்டாயமாய் அவரைக்காணலாம்.

உலகத்திலுள்ள அநீதிகளும், கொடுஞ்செயல்களும் துக்கங்களும், நாஸ்திக புத்தியுள்ளவர்களால் உண்டாகின்றன; கடவுள் இல்லையென்பவருக்கும், இருக்கிறார்,

R6 N21

என்ற முழுநம்பிக்கையில்லாதவருக்கும் புத்திக்குறை வுண்டாகும். அதனால் காரண காரியங்களை யறியாமல் தமக்கும் பிறருக்கும் துண்டான சம்பந்தங்களை யேற்படுத்த முயன்று, துன்பங்களை உற்பத்திசெய்கின்றனர்.

கடவுள் அதையறிந்து பக்தர்களாலும் முக்தர்களாலும் நல்லறிவைப் பரவச்செய்து வருகிறார். ஞானிகள் அங்கங்கே அவ்வப்பொழுது தோன்றி, கடவுளை யறிய வழிகளைக்காட்டியும், தம்மைப்போல் அவ்வழிகளைப்பிடித்துச் செல்பவரைக் கடவுளைத் தரிசிக்கும்படியும் செய்கின்றனர். கடவுளே அந்த ஞானிகளில் ஒருவராய் மனித உருவெடுத்து, அவ்வப்பொழுது ஆங்காங்கே வருகிறார். அவரை யறியத்தக்க பாக்கியம் பெற்றவர்கள் சுகமாய்த் துக்கமின்றி வாழ்கின்றனர்.

ஆதிமூலமாய், சர்வ வல்லமையுள்ளவனாய், சகல கல்யாண குணங்களையுடையவனாய், அன்பே உருவாய், நீதியேசுபாவமாய், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரங்களைச் செய்து முக்தியென்னும் அருளானந்தம் கொடுப்பவனாய், நித்தியனாய், சங்கற்ப ரஹிதனாய், குணாதீதனாய், சுயம்புவாய், இருப்பவன் கடவுளே என்றும்; அவன்

ஒரு புருஷனென்றும்; அவன் ஒரே புருஷனென்றும்; அவனே புருஷோத்தம னென்றும்; அவனை நேருக்கு நேர் பார்த்தவர்கள் சொல்லியுள்ளார். அவ்வாறு அவனை உருவமாயும் அருவமாயும் தரிசித்தவர்கள் இப்பொழுதும் இருக்கின்றனர்.

அண்டகோடிகளைத் தன் மனமாகிய பளிங்கு போன்ற உபாதியில் பிரதிபிம்பிக்கச்செய்து அப்பிர திபிம்பக் கூட்டங்களாகிய நானாவிதமான பிரபஞ்சம் தன்னிலிருந்துண்டான தென்றும், அது தானே யென்றும், தன்னைத்தவிர அது வேறேயில்லை யென்றும், பிரதிபிம்பமில்லாத வஸ்துவும் தானே யென்றும், உணர்ந்திருக்கிறார் கடவுள்.

அவர், ஆனந்தமேலீட்டால் உலகத்தை (உலகக் கூட்டங்களைச்) சிருஷ்டித்தார். தன் சக்தியைத் தானே யறிந்து, மகிழ இம்மண்டலாதிகளையும், அவற்றிற் செறிந்துள்ள ஜீவர்களாகிய அணுக்களாலாகிய லாகரங் களையும் சிருஷ்டித்தார். மகிழ்ச்சியின் நிமித்தமாய்ப் பிர பஞ்சம் உண்டானதால் அதுவும் எப்பொழுதும் மகிழ்ந்தே இருக்கவேண்டும். துக்கத்திற்குக் காரணம் பேத

புத்தி; தான் வேறு, இதரஜீவர்கள் வேறு, என்ற பேத புத்தியினால் செய்யும் கர்மங்களே துக்கத்தைத்தருகின்றன.

பிறருக்குத்துன்பம் விளைவிக்காதவன் துன்பமே யடையான். மற்றவர்களுக்கு இன்பத்தையே செய்பவன் எப்பொழுதும் இன்பத்தையே அனுபவித்திருப்பான். இதரருக்குத் துன்பத்தையும் இன்பத்தையும் செய்யாமல் தன்னிற்றனே அடங்கியுள்ளவன் சங்கற்பம், விகற்பம், இரண்டு மில்லாதவனாய் இன்பதுன்பங்களுக்கு அப்பாலுள்ள நித்தியமான சுகக்கடலில் அமிழ்ந்து கிடப்பான். அதுவே கடவுளின் சுபாவம். கடவுள் சும்மாதான் இருக்கிறார்; ஆனந்தமாய் சுகானுபவத்திலே யிருக்கிறார்; காலங்களைக்கடந்து நிற்பதால் அவரைக் கடவுள் என்கிறோம். அவருக்கு ஒரு க்ஷணத்தில் உண்டான சங்கற்பத்தால் முக்காலங்களுக்கும் உட்பட்ட அண்டகோடிகளும், ஜீவகோடிகளும் உற்பத்தி, ஸ்திதி, லயம், ஐக்யம், என்ற அவஸ்தைகளை யடைகின்றன. அவரிடத்தில் ஐக்யப்பட்டால் நித்ய சுகம் உண்டாகும்; துக்கம் என்பது மாயமாய் மறைந்துபோம்.

ப. ஸ்வாமி! என் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிவிட்டீர்கள். ஆனால் முதலில் நான் சொல்லியதும் உண்மையே. அதாவது, "உலகில் எங்கும் அநியாயங்களும் அக்கிரமச்செயல்களும் மலிந்து கிடக்கின்றன; அவற்றால் துவேஷம் பகை உண்டாகி, அது காரணமாய் யுத்தங்களும் சண்டைகளும் நடக்க, அவற்றில் நாம் சம்பந்தப்பட்டே இருக்கவேண்டியிருத்தலால் நம்முடைய சரீரத்திற்கும் மனத்திற்கும் துன்பங்கள் உண்டாய்க்கொண்டே யிருக்கின்றன" இதிலிருந்து தப்பிப் பிழைப்பது எப்படி?

மு. அப்பனே! நீ ஒரு ஜன்மத்தில் ஒரு காலத்திற் செய்த கர்மத்தால் இந்த பயங்கரமான பிரபஞ்சத்தில் அகப்பட்டுக்கொண்டு துக்கப்படுகிறவன் அல்ல. பலஜன்மங்களில் செய்த பல கர்மங்களால் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறாய். "முள்மேலே சேலையைப்போட்டால் மெள்ள மெள்ள எடுக்கவேண்டும்" துக்கமயமான பயங்கரமான சம்சாரத்தில் இருந்து விலக ஒரே நாளில் முடியாது. அப்படி விலகவேண்டும், என்ற சிரத்தை உன்னில் பலமாய் உண்டாயிருந்தால், அதற்கான முயற்சிகளைச் செய்யச்செய்ய விலகிக்கொண்டே

வரலாம். முக்தியடைய வேண்டும் என்ற சிரத்தையுள்ளவன் தன் முயற்சியின் அளவாய்ப் பலன் அடைவான். ஒருவன் இந்த ஜன்மத்திலே முக்தியடையலாம். இன்னொருவன் இன்னும் சில ஜன்மங்கள் கழிந்த பிறகு முக்தியடையலாம். ஆனால் ஒவ்வொரு ஜன்மத்திலும் மோக்ஷமடைய ஏற்பட்டுள்ள வழிகளில் முயற்சிகள் செய்வது வீண்போகாது. முயற்சிக்குத் தக்க பலன் நிச்சயமாய்க்கிடைக்கும்.

ப. ஸ்வாமீ! "ஆனந்தமேமலீட்டால் கடவுள் சிருஷ்டித்த இப்பிரபஞ்சம் ஆனந்தமயமாய் இருப்பதே நியாயம்" என்ற நீங்கள், இவ்வுலக வாழ்க்கை துக்கமயமென்றும், பயங்கரமென்றும், ஒப்புக்கொள்ளுகிறீர்களே. முக்தி யென்பது முயற்கொம்பு தானே!

மு. பந்தமுள்ளவனுக்கு இது துக்கமாயும் பயங்கரமாயும் தோன்றும். முக்தனுக்கு இது அவ்வாறு தோற்றாது. எனக்கு சுகக் குறைவுண்டாய், அதை நிவர்த்திக்க உன்னை உபாயம் கேட்டவனல்லவென்பதை மறவாதே. பந்தனுக்கு முக்தி முயல் கொம்பாயும் முக்தனுக்குப் பிரபஞ்சம் முயற்கொம்பாயும் தோன்

றும். "இவ்வுலக வாழ்க்கையில் உழல்வதே எனக்குப் பேரின்பம். இதில் எனக்கு துக்கமென்பதில்லை. ஹிதாஹிதமும் தெரியவேண்டியதில்லை, தர்மாதர்மமும் தெரிய வேண்டியதில்லை" என்றிருப்பாயானால் இருக்கலாம். உன்னையார் தடுக்கலாம்.

ப. அப்படியும் இருக்கமுடியவில்லை, ஆண்டவனே! உம் சொற்படியும் நடக்க வொட்டுதில்லை. வீட்டில் ஆகாராதிகளுக்குரிய சாமான்களில் சிலவற்றைத் தினம் தேடித்திரிய வேண்டியிருக்கிறது. மனைவியே ஒரு பிரபஞ்சமாய் இருக்கிறாள். அவளைத் திருப்தி செய்யப் பலவித முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கிறது. அவளுக்குப்புகுந்த வீட்டுப்பேர்களிடத்தில் துவேஷமும், பிறந்தவீட்டுப் பேர்களிடத்தில் அபிமானமும் இருக்கிறது. அதைக்காரியமாக்கிக் காட்டும்பொழுதெல்லாம் நமக்கு மனவாட்டந்தான். குழந்தைகள் அதுவேண்டும், இது வேண்டும், என்று துன்பப்படுத்துகின்றன. தாய் தகப்பன் மாருக்கும் மனைவிக்கும் பொருத்தமில்லை. பணக்காரப் பந்துக்கள் வந்தாலும் கஷ்ட நஷ்டம். ஏழைகளாகிய பந்துக்கள் வந்தாலும் அப்படியே. வயிற்றுப் பிழைப்புக்காகச் செய்துவரும் விருத்தி சம்பந்தமாகக்

கவலைப்படவேண்டிய விஷயங்கள் அனேகம். இது போக, பொதுஜன விஷயமாக அதாவது, மதாபிமானிகள், தேசாபிமானிகள், பாஷாபிமானிகள், சுஜாதியபிமானிகள், முதலிய பல்லோருக்கும், ஏனென்று கேட்டுத்திருப்தி செய்ய வேண்டியிருக்கிறது.

பலவிதமான சடங்குகள், பிரார்த்தனைகள், யாத்திரைகள், ஜனன மரண சம்பவங்கள், வியாதிகள், நானோ என் குடும்ப ஜனங்களில் சிலரோ அடிமைப்பட்டுள்ள துர் அப்பாசங்கள், முதலிய நானா விவகாரங்களால் மனம் எவ்வாறு நொந்து வாடாமலிருக்கும். கவலைகளால் ஓயாமல் மனம் தட்டுத்தடுமாறிக் கெட்டலைவதே சகஜமாய்விட்டது. நடுவில் நடுவில் அனுபவிக்கப்படும் சுகங்களாலும் சந்தோஷங்களாலும் மனம் எப்பொழுதும் சுகமாயும் சந்தோஷமாயும் இருக்கப்படாதா?

மு. நண்பா! சம்சாரம் என்ற ஒரு பதத்தில் என்னென்ன எவ்வெவ்விதமாய் அடங்கியிருக்கின்றனவென்று எனக்குத்தெரியாதா? பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினின்று விடுபடுவதே முக்தி. ஜீவன் முக்தன் எங்கிருப்பினும், எவ்வகை விவகாரங்களில் சம்பந்தப்

யட்டிருப்பினும் நிச்சல சித்தனைப் துக்க ரஹிதனைப் இருப்பான்.

ப. அம்முக்தி யென்பது எவ்வாறு சித்திக்கும், பிரபு! சாஸ்திரங்களை விசாரித்தால் போதுமா, அல்லது வேறே ஏதாவது மார்க்கங்கள் உண்டா?

இரண்டாவது அத்தியாயம்.

சாஸ்திர விசாரணை — உபாஸனை.

சரியை.

மு. அன்பனே! பக்தியென்பது சாஸ்திர ஞானம் அல்ல. வாச்சாஞ்ஞானம் அல்ல. ஆனால் அது ஒருவர் அப்யாசிக்க வேண்டிய உபாஸனையாகும். பக்தியென்னும் சாதனத்தின் முடிவு ஞானம். ஞானம் சித்தித்தலே முக்தி. ஞானம் வேறு, பக்தி வேறென்று நினைப்பது சரியல்ல.

உபநிஷத்துகள், ஸ்மிருதிகள், இன்னும் பலவாகிய நூல்கள், ஞானத்தை அடைய வழிகளையும் சாதன

ங்களையும் காட்டுமேயன்றி ஞானத்தைக் கொடா. வேதாந்த நூல்களையும், யோக சாஸ்திரங்களையும், சித்தர் கிரந்தங்களையும் உரைகளுடன் மனப்பாடம் பண்ணிவிட்டால் முக்தியடைந்து விடலாம் என்று நினைப்பது தப்பு. அதில் செலவழிக்கும் காலத்தையும், சக்தியையும் சாதனத்தில் செலவழிக்கிறவன் சீக்கிரத்தில் உண்மையைத் தெரிந்துகொள்வான். இதனால் சாஸ்திராதி நூல்களைக் கண்டிக்கிறேன் என்று எண்ணாதே. அவற்றால் நன்மைகள் உண்டு. அவற்றைப் படித்துப் பொழுதுபோக்காமல், உடனே ஏதாவது (மோக்ஷமார்க்கத்திற்குரிய) ஒரு சாதனத்தைக் கைக்கொள்பவன், தனக்குண்டாகும் அனுபவங்களாலே சாஸ்திரங்களில் உள்ள உண்மைகளைத் தெரிந்து கொள்வான்.

ப. பக்தி செய்வதெப்படி; அதற்குச் சுலபமான வழி யேதேனு முண்டா?

மு. நண்பனே! பக்தியைவிட இலகுவான சாதனம் வேறொன்றும் இல்லை. சீக்கிரம் பலிக்கக்கூடிய பக்தி ஒன்றுளது; அதாவது, "ஸகல ஜீவகோடிகளினுடைய சரீரங்கள் எல்லாம் சேர்ந்து கடவுளுடைய சரீரமாகி

றது. இந்த சமஷ்டி சரீரமே அவருடைய சரீரம். சரீர தாரனுக்கு வேண்டிய அன்ன பானதிகள், நிழல், உன் சரீரத்திற்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு இதர ஜீவர்களினுடைய சரீரங்களுக்கும் அவசியம். உன் தேகத்தில் உனக்கு எவ்வளவு அபிமானம் உள்ளதோ அதே அளவான அபிமானத்தை இதர ஜீவர்களுடைய தேகங்களில் காரியாம்சத்தில் காட்டி வா. உன் வருமானத்தில் நாலில் ஒரு பகுதியை உன் குடும்ப ஜனங்கள் நீங்கலான இதர ஜனங்களின், அதாவது, ஏழைகளின் குறைகளை நிவர்த்திக்க விநியோகம் செய்துவா, இன்னுமொரு கால்பாகத்தை இரக்த சம்பந்த முள்ள (மிகவும் வறுமைப்பட்டுள்ள) பந்துக்களுக்கு உபயோகமாய்ச் செலவு செய். டம்பமாய் ஆடை ஆபரணங்களில் அதிகப் பணத்தைச் செலவழிக்காதே. வீடுகள், வாகனங்கள் முதலியவற்றை உன்னைச் சுற்றியுள்ள நூறு பேர்களில் தொண்ணூறு பேர்களுக்கு எப்படி அமைந்துள்ளதோ அவ்வாறே அமைத்துக்கொள்.

சிலர் ஆங்காங்கே ஆலயங்களிலுள்ள தெய்வங்களுக்குப் பதினாயிரம் லக்ஷம் ரூபாய் பெறுமான ஆபரணங்களைச்செய்து போடுகிறார்கள். தங்க வாகனங்கள்,

வெள்ளி ரதங்கள் வேணுமென்று ஈச்வரன் கேட்கவில்லை. சாதாரண வாகனங்கள், ரதங்கள் அவருக்கு உபயம் ஆனால் போதும். மிகுந்த திரவியத்தை உணவற்றவர்களுக்கு உணவளிப்பதிலும், உடையற்றவர்களுக்கு உடைகள் அளிப்பதிலும், நிழலற்றவர்களுக்குக் குடிசைகள் அளிப்பதிலும், செலவழிப்பதே சிறந்த பக்தியாகும். இக்கொள்கையை யனுசரித்தே தர்மங்களைச்செய்து வரவேண்டும். இதுவே ஈச்வர சம்மதம். கடவுள் ஆடம்பரப் பிரியனல்ல; தீனர்களின் ரக்ஷகன்; ஏழைச் சிசுக்களிடத்தில் அளவற்ற அபிமானமுள்ளவன். தாய்ப்பால் காணாதசிசுக்களுக்குப்பால் அளிப்பதே ஈசுவரனுக்கு உகந்த அபிஷேகம். முப்பத்திரண்டுவகையான தான தர்மங்களைச்செய்தல், ஸ்தலயாத்திரை, தீர்த்தயாத்திரை முதலியன பக்தி சாதனத்தில் 'சரியா' என்ற அம்சமாகிறது. இதின் தத்துவமென்ன? 'நான்,' என்ற அகங்காரமும் 'எனது' என்ற மமகாரமும்தான் ஒருவருக்குப் பந்தத்தை விளைவிக்கிறது. எனது என்று சொல்வதற்குரிய பொருள்களை ஏழைகளுக்கு அவ்வப்பொழுது ஏதோ ஒரு அளவையனுசரித்துத் தானம் செய்துவந்தால் மமகாரம் குறையும். தன் குடும்பஜனங்

களுக்குரிய பாகம் நீங்கலாக தனக்கென்றுள்ள சொத்தின் பாகத்தைப் பூராவும் தானம் செய்துவிட்டால் மமகாரம், முற்றிலும் நீங்கும்.

தன்னுடைய உடல், பொருள், ஆவி, மூன்றையும் இதர ஜீவர்களின் நன்மைக்காக எவர் ஒருவர் தத்தம் செய்து விடுவாரோ, அவர் பாபங்கள் எல்லாம் நசித்துப்போம், அவரைக் கடவுள் உடனே ஆட்கொள்வார். "சுவார்த்தப் பரித்தியாகம்" அதாவது சுயநலத்தை முற்றிலும் விடுவதே உத்தம பக்தி.

ப. ஸ்வாமீ! ஒரு சாஸ்திரஞான முள்ளவரை நான் விசாரித்த பொழுது மேகம் வர்ஷிப்பதுபோல் சில பரிபாஷைகளைப் பொழிந்தார். அதில் இரண்டொன்று ஞாபகமிருக்கிறது. அதாவது மோக்ஷஸாதன மார்க்கம், இருவகைத்தாயது. ஒருவகை **விகங்கமார்க்கம்**; இதற்குப் 'பக்ஷிமார்க்கம்,' 'சுகமார்க்கம்', 'ஸாங்க்யம்', 'நிற்குணோபாசனை', 'ஞானயோகம்' என்ற பெயர்களும் உண்டென்றும்; மற்றொருவகை, பிபீலிகாமார்க்கம்; இதற்கு 'எறும்புமார்க்கம்' 'வாமதேவமார்க்கம்' 'சகுணத்தியானம்' 'கர்மயோகம்' 'பிரவிருத்திமார்க்கம்' என்ற

பெயர்களும் உண்டென்றும் சொல்லி இன்னும் அனேகம் சொன்னார்.

இன்னொரு சாஸ்திரியார் சவுசவிதிகள், ஸ்நான விதிகள், பற்றேய்க்க மந்திரங்கள் விதிகள், மலர் பரிக்கு விதிகள், சந்தனம் அரைக்க விதிகள், முதலியவற்றைச் சொல்லுங்கால் அவ்விதிகளில் எவையேனும் தவறிநடந்தால் மகத்தானபாபம் சம்பவிக்குமென்றும், அதற்காக பயங்கரமான நரகம் அடையவேண்டி வருமென்றும் சொன்னார். அந்தமாதிரி பூஜை செய்யப்புகுந்து நரகமடைவதைக்காட்டிலும் பக்தி செய்யாதிருப்பதே நலமென்றிருந்து விட்டேன்.

இன்னொருவர் வேதாந்தியாம், அவர் சொன்னதிலும் சில வார்த்தைகள் ஞாபகத்துக்கு வருகின்றன: 'சம்பந்த அத்தியாசம்' 'சம்பந்தி அத்தியாசம்,' 'சம்பந்த மாத்ராத்தியாசம்,' 'ரஜ்ஜு சர்ப்பம்,' 'சிப்பிவெள்ளி,' 'கடாகாசம்,' 'மடாகாசம்,' 'திரிபிடி,' 'சாதன சதுஷ்டயம்,' 'ஐவகைப்பிராந்தி,' 'பஞ்சகோசம்' 'பஞ்சீகரணம்' 'அவஸ்தாத்திரயம்,' 'ஆவரணம்,' 'விக்ஷேபம்,' 'தடஸ்தலக்ஷணம்' ஆகிய பல பரிபாஷை

களைப் பிரயோகம் செய்தார். அப்படிச்சொல்வதோடு அநேக மார்க்கங்களையும் கண்டிக்கப் புகுந்தார். எனக்குத் தலைவலி எடுத்தது, விடைபெற்று வந்துவிட்டேன். அன்றுமுதல் வேதாந்தம் என்றால் பயமாயிருக்கிறது.

மு. அப்பா! ஒன்றையும் கண்டனம் செப்பாதே, ஏளனம் செய்யாதே. அந்த மனோதர்மத்தை விட்டுவிடு. உன்னைப்போன்றவர்கள் 'துப்பறியும் நாவல்களையும், நியூஸ் பேப்பர்களையும், நாறு புஸ்தகங்களையும், தினம் இரண்டு மூன்று மணிநேரம் வாசித்துக் காலத்தை வீண்போக்குவதில்லையா? இன்னும் சிலர் 'கடுதாசி ஆட்டம்' என்ற சீட்டாட்டத்தில் காலத்தையும் பணத்தையும் செலவழிப்பதில்லையா. அதைவிட சாஸ்திரங்களை விசாரிப்பது நன்று. எக்காரணத்தாலும், இதரரை தூஷிப்பதையும், துவேஷிப்பதையும் விட்டுவிடு.

பல சாஸ்திரங்களைப் படித்து வித்யா கர்வங் கொள்ளப்படாது. தர்க்கத்திலும் வாதத்திலும் வீண் பொழுது போக்கக்கூடாது. எந்த மதத்தையும் கண்டிக்கப்படாது. சாஸ்திர விசாரணையில் நாலு வருஷகாலம் ஒருவர் பிரயாசைப் படுவதைக்காட்டிலும், அந்த நாலு வருஷத்தை ஒரு மந்திரத்தை ஜபிப்பதிலோ, பிராண

பாமம் செய்வதிலோ செலவழித்தால் திரம்பப் பலன் உண்டு. சாதனம் விருத்திபடையவடைய அநுபவத் தால் அனேக உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம். தபசுசெய்து சித்திபடைந்துவிட்ட பிறகு சாஸ்திரங் களைப் பார்க்கலாம். அப்பொழுது, தான் அநுபவத்தில் உணர்ந்தவற்றையே சாஸ்திரங்கள் சொல்கின்றன வென்று தெரிந்துக் கொள்ளலாம்.

ப. தபசென்றால் என்ன பிரபு! அதின் தத்துவ மென்ன; அதைத் தவக்குவதெப்படி; இல்லறத்தில் இருந்துகொண்டே தபஸ் செய்யலாமா? இவ்விஷயங் களைத் தங்கள் அநுபவத்திலிருந்து சாதாரண வார்த் தைகளைக் கொண்டு தெளிவாய்த் தெரியும்படி தயவு செய்து சொல்லவேண்டும்.

மு. மனதை அடக்குவதே தபசின் தத்துவம் தகாத வழிகளில் அதாவது மேன்மேலும் பாபங்களை யும் துக்கங்களையும் விளையச்செய்யும் வழிகளில் மனம் செல்வதைத் தடுக்கவேண்டும். நல்ல வழியைக்காட்டி அதில் மனதைச் செலுத்தினல் கெட்ட வழியில் போ காது. அது, தானே விலகும். பின் சிரேபஸான (புண்

ணியமான) ஒரே வழியில் அதைப் புகவிடவேண்டும். இதுதான் தபசின் லக்ஷணம். இல்லறத்திலிருந்து கொண்டே தபசு செய்யலாம்.

மந்திரஜபம், பாராயணம், பூஜை, நித்யானுஷ்டானம், ஸ்தோத்திரம், ஆலயதரிசனம், அர்ச்சனை, ஹோமம், பஜனை, நமஸ்காரங்கள், பிரதக்ஷணங்கள், முதலியவற்றில் ஒன்றையோ, சிலவற்றையோ, எல்லாவற்றையுமோ அனுஷ்டித்தல் தபசாகும். அவரவர் தம் தம் உலக வாழ்க்கைக்குரிய பிரவிருத்திகளுக்கு இடையூறு பண்ணாமல், இவற்றை அனுஷ்டிக்கலாம். இவற்றை அப்யாசிப்பதால் பாபங்கள் நசிக்கும்; இகத்திற்குரிய சம்பத்துகள் உண்டாகும்; மனம் வாக்கு காயம் என்ற திரிகரணங்கள் சுத்தமாகிக்கொண்டே வரும்; அத்துடன் முக்தி மார்க்கத்தில் செல்ல மனம் பக்குவமடைந்துகொண்டே வரும்.

ப. ஸ்வாமீ! "சுயநலம் விடல், பிறர்நலம் பேணல்", என்ற தர்மத்தைக் கைக்கொண்டு, தனது என்று சொல்வதற்குரிய ஸொத்துக்களைக்கொண்டு இதரர்களுக்கு உபகாரம் செய்வதே சிறந்த பக்தி என்றீர்களே. அது

வே என்க்கும் நன்றெனப்பட்டது. ஆதுவே போதாதா; மற்றவை எதற்கு?

மூ. நண்ப! தன் வருமானத்தி பொருளைத் தானம் செய்யச்செய்ய அவை மேன்மேலும் இவனுக்கு வந்து கொண்டேயிருக்கும். தானங்களுக்கு ஈச்வராக்ஞைப்படி அந்த மகாத்மியம் உண்டு. அவற்றில் கைகூடும் புண்ணியத்தால் சுவர்க்காதிபோகங்களை யனுபவிப்பான். மறுபடியும் ஜன்மமெடுத்தால் சகல சம்பத்துள்ள குலங்களில் ஜனிப்பான். அப்பொழுதும் பூர்வ ஜன்ம வாசனைப்படி தானதர்மங்களைச் செய்வான். அதிலே மனம் அழுந்தும், பெரிய பெரிய தானதர்மங்களைச் செய்யவேண்டுமென்ற இச்சை உண்டாகும். அக்கோரிக்கையும் நிறைவேறும். அவ்வாறானால், கீர்த்திப்பிரியம், கர்வம், உற்சாகம் ஆகியவற்றில் மனம் பற்றும். ஜனன மரண சகிதமான பல ஜன்மங்கள் வந்துகொண்டேயிருந்தால் முக்தியடைவதெப்படி? சொத்துகளில் உள்ள பாசம் நீங்குவதற்காக தானங்கள் செய்யவேண்டும். அப்படிச் செய்யும்பொழுதும் பிறருக்கு உபகாரம் செய்கிறேன் என்ற புத்தியும் இவனிடத்திலிருக்கப்படாது; ஏனெனில் தானங்களால், அதாவது பரோப

காரங்களால் இவன் தனக்கே உபகாரம் செய்துகொள்கிறான்.

நம்முடைய இகத்திற்குரிய சம்பத்துகள் நம்முடையதல்ல; அவை ஈச்வரன் தந்தவை, எல்லோருக்கும் சொந்தம், எல்லோரும் அவற்றை உபயோகப்படுத்திக்கொள்ளட்டும்; நமக்கு சரீர காரணைக்கு வேண்டியது கொஞ்சம் அன்னமும், வஸ்திரமும், ஒரு குடிசையின் நிழலும்தானே; நாம் எப்படிபாவது பிறவிக்கடலைத் தாண்டி முக்தியடையவேண்டுமென்ற கவலை ஒருவரிடத்தில் எப்போதும் இருந்துகொண்டேயிருக்கவேண்டும்.

மந்திரஜபம், பூஜை, பிராணாயாமம், முதலிய தபசு (அப்யாசங்கள்) மனம் பக்குவமடைவதற்கு அத்யாவசியமாகும். இவற்றையே 'கிரியா' என்ற பக்தி சாதனத்தின் அம்சம் என்பார்கள்.

ப. அறிஞரே! ஒரு சந்தேகம். ஈச்வரன் இல்லை என்ற புத்தியுள்ள நாஸ்திகரும், கடவுளை அறிய முடியாது, அவர் உளரென்றும் இலரென்றும் சாதிக்க முடியாது என்ற புத்தியுள்ளவரும், தானதர்மங்கள், பரோ

பகாரங்கள் செய்தால் அவை பக்தியாகுமா, அவற்றிற்குப் பலன் உண்டா?

மு. குழந்தாய்! அதிற் சந்தேகமில்லை! காருண்யத்தால் செய்யும் அவ்விதமான சத்கர்மங்கள் பக்தியேயாகும். அவற்றிற்குப் பலன் உண்டு. நாம் பகவானை அறியாமலிருந்தாலும் நம்மையவன் அறியாமலிரான். நாம் இருப்பது கடவுளுக்கு நிச்சயமாய்த்தெரியும். யார் யார் அன்பால் ஏவப்பட்டு எப்பொழுதேனும் எவ்விதமான பிரோபகாரம் செய்தாலும் அது கடவுளின் கிருபையை வருவித்துக்கொடுக்கும். ஜீவகாருண்யமே சிறந்த பக்தி. இதர ஜீவர்களிடத்தில் துவேஷம் நீங்குவதே பக்தியாகும் என்றால் உள்ளன்பு பக்தியாகாதா? பூததயை உள்ளவர்கள் அது காரணமாகவே இந்த ஜன்பத்திலோ அடுத்த ஜன்பத்திலோ ஆஸ்திக புத்தியுள்ளவராவார். கடவுள் உண்டென்றுணர்ப்ப அவர்களுக்குப் பல ஹேதுக்கள் ஏற்படும்.

ப. 'கிரியை' என்ற பக்தி அம்சத்தின் தத்துவமென்ன; அதன் சாதனபலன் என்ன? அதை சௌகரியமாய், நிர்ப்பயமாய் அநுஷ்டிக்கும் வழி யென்ன?

மூன்றாவது அத்தியாயம்.

கிரியை - அதன் லக்ஷணமும் பலனும்.

மூ. அப்பனே! சாதாரண ஜனங்களுக்கு அஞ்ஞானம் செறிந்திருப்பதால் தத்துவதிருஷ்டி உடனே உண்டாகாது. ஒருவனுக்குத்தான் இருப்பதும், தன் பந்து மித்திரர்கள் இருப்பதும், இதர ஜீவர்களடங்கிய பிரபஞ்சமிருப்பதும், எப்போதும் அறிவில் உறுத்திக்கொண்டேயிருக்கிறது. அவனுக்குத் தேகமே, தான் என்னும் புத்தியும் சதா இருந்துக்கொண்டே யிருக்கிறது. இந்தப் புத்தியோடு விவகரித்துக்கொண்டிருப்பதினால், சுக துக்கங்களை யனுபவித்துக்கொண்டேயிருக்கிறான். அப்படியிருப்பதினால், அவனுக்கு நித்யசுகம் வாய்ப்பதில்லை. இகவாழ்க்கையில் சம்பவிக்கும் சுகம் எதுவும் நீடிப்பதில்லை. அவன் அலுப்படைகிறான், துக்கப்படுகிறான், ஏக்கமடைகிறான்.

அத்தருணத்தில் அவன் மனத்தை நல்வழியில் திருப்பவேண்டுமானால், ஈச்வரன் சகலத்திற்கும் சிருஷ்

டிகர்த்தாவாய், ரக்ஷகனுப், துக்கமற்ற நித்பசுகத்தைக் கொடுக்க வல்லவனுப் இருக்கிறுனென்று சொல்லுகிறோம். அவன் உடனே "கடவுளை எப்படிப் பார்க்கலாம், அவனைக்காட்டுவார் யார்?" என்று வினவுகிறுன். அப்பொழுது அவனைப்பார்த்து "அப்பனே! கடவுள் இன்னின்ன காலங்களில் இன்னின்ன மூர்த்தியாய் அவதாரஞ் செய்திருக்கிறுர். இப்பொழுதும் ஒரு மூர்த்தியாய் அவதரித்திருக்கிறுர். அக்காலங்களில், பொல்லாத துஷ்டர்களை சம்ஹரித்திருக்கிறுர்; பக்தர்கள் கேட்ட வரங்களை கொடுத்திருக்கிறுர்; பாபிகளினுடைய பாபங்களைப் போக்கடித்திருக்கிறுர், முமுட்சுகளுக்கு முக்தியைக் கொடுத்திருக்கிறுர், அவர் முக்தியைக் கொடுத்தாலன்றி அழிவற்ற பேரானந்தம் பிராப்தமாகாது. உன் குல சம்பிரதாயத்தை யனுசரித்து அவரை அந்த மூர்த்தியாய்ப் பக்திபண்ணி வா. உனக்குப் பிரத்யக்ஷமாவார்" என்று சொல்லுகிறோம்.

ப. சதுரரே! எங்களுடைய குட்டெல்லாம் உமக்குத் தெரிந்திருக்கிறது. அந்த மாதிரியான மனிதன் நான்தான். என்கூட வந்திருக்கிறவர்களும் அதற்காகத் தான் வந்திருக்கிறுர்கள். உமது முகத்தைப்பார்த்தால்

தேஜஸ்விளங்குகிறது; அன்பு ததும்புகிறது; அசையாத கெம்பீரச்சித்தம் திலங்குகிறது; உமது சந்நிதானத்தில் கவலைகள் எல்லாம் அகல மனது அமைதியடைகிறது.

என்குலத்திற்கு விஷ்ணு உபாஸனை பிரதானம். நான் அதையே கைக்கொள்ளலாமா; எனக்கு மந்திரம் தெரியாது! தந்திரம் தெரியாது; எவ்வாறு உபாஸனையைத் துவக்கலாம்?

மு. சிரத்தை முக்யம். "ஓம் நமோநாராயணுய" என்று ஜபிப்பதே விஷ்ணு உபாஸனைக்குப் போதுமானது. இந்த மந்திரத்திற்குரிய பலன்கள் அளவிறந்தனவாம். இதன்மகாத்மியம் சொல்லொணுது முதலில் காலையிலும் மாலையிலும் நடுப்பகலிலும் நூறு ஆவர்த்தி (நூற்றெட்டுத்தடவையும்) ஜபிக்கலாம்; அதிக சாவகாசமுள்ள தினங்களில் திரிகாலத்திலும் ஆயிரத்தெட்டாவர்த்தி ஜபிக்கலாம். வர வர வேலை யொழிந்த நேரங்களில் எல்லாம் ஜபிக்கலாம்.

மானசிகமாய் அதாவது உதடு அசையாமலும், உள்நாக்கு அசையாமலும் ஜபம் செய்தால் விசேஷ பலன் உண்டு. பிறர் காதுகேட்க மந்திரத்தை ஜபிப்பது

18463

அவ்வளவு உசிதமல்ல. சதாகாலமும் ஜபிக்கவேண்டு மென்பதை லக்காக வைத்துக்கொண்டு மானஸிக ஜபம் அதிக சாதனமானல் அதுவே, பிராணாயாம யோகத்தில் கொண்டுபோய்விடும். இம்மந்த்ரமே தாரகமாகும் இதுவே மோக்ஷத்தைக் கொடுக்கும். விஷ்ணுபக்தி செய்பவர்கள் இதர மூர்த்திகளை நிந்திக்கப்படாது. அப்படிச்செய்தால் அவர்கள் தபசு வீணுய் முடியும்.

ப. ஸ்வாமீ! "ராம்" "ராம்" என்ற நாம கீர்த்தனம் சிலாக்கியமென்கிறீர்களே, அதையும் உச்சரிக்கலாம் அல்லவா?

மு. அதுவும் சர்வ சிலாக்கியமான மந்திரம் தான் அதைச் சதாகாலமும் உச்சரித்து அநேகர் சித்திகளையும் முடிவில் முக்தியையும் அடைந்திருக்கின்றனர். உச்சரிப்பிற்குச் சுலபமாயிருப்பதால் அதையே வைத்துக்கொள்ளலாம். ஆனல், ஒரு மந்திரத்தைப்பிடித்தால் அதையே கடைசி வரையில் விடாமல் ஜபிக்கவேண்டும். ஒன்றை விட்டு மற்றொன்றிற்குத் தாண்டப்படாது.

மந்திரஜபத்தால் தெய்வபலம் சித்திக்கும், ரோகங்கள் முதலிய பீடைகள் நிவர்த்தியாகும், அன்ன வஸ்திராதிக்குக் குறைவேற்படாது. மனம், சுத்தியடையும்

மனச்சாக்ஷி விருத்தியடையும். பாபமூட்டைகள் நசிக்கும். ஞானம் உதயமாகும். சத்சங்கம் கிடைக்கும். கடைசியில் காரண குருவாய் அவதரித்து விளங்கும் தீக்ஷா குருவின் தரிசனம் கிடைக்கும். அவர் அருளால் மோக்ஷம் அடைவர்.

ப. ஸ்வாமி! வீட்டில் பூஜைசெய்தால் குடும்பஜனங்களுக்கு நன்மையுண்டாகும், அவர்களும் நல்வழியில் திரும்புவார்கள் என்று நம்புகிறேன். அதற்குச் சுலபமான வழியென்ன?

மு. ஒருவிக்கிரகத்தையாவது, படத்தையாவது, வீட்டில் வைத்துக்கொண்டு திருவாய்மொழி பிரபந்தத்தில் சில பாசுரங்களை ஓதி, கற்பூர தீபம் காட்டி நமஸ்காரம் செய்வதேபோதும். அல்லது, துளசிதளங்களால் "ஓம் நமோநாராயணாய" என்று நூற்றெட்டு அர்ச்சனை செய்யலாம்; விஷ்ணு ஸகஸ்ரநாம நாமாவளியைக் கொண்டு அர்ச்சனை செய்யலாம்; தெரிந்தவரைக் கொண்டு அந்த அர்ச்சனையைச் செய்விக்கலாம்.

ஒரு புஸ்தகம்போட்டு அதில் தினம் குடும்பத்தில் எழுதத்தெரிந்தவர்கள் அந்த மந்திரத்தை எழுதலாம்.

தினந்தோறுமோ அல்லது அடிக்கடியோ ஆலய தரிசனம் செய்யலாம். விஷ்ணுபக்தர்கள் சரித்திரங்களையும், ராமாயணம், பாகவதம் இவைகளையும் வாசிக்கலாம். இவையெல்லாம் தபசுதான். சரீரத்தை சுத்தமாய்வைத்துக்கொள்வதும், சரீரத்தையும் உடைகளையும் சுத்தமாய் வைத்துக்கொள்வதும் மனசுத்திக்கு அனுகூலமாயிருக்கும். ஆச்சார நியமங்களைக் கூடியமட்டும் அனுஷ்டிக்கவேண்டும். சில சமயங்களில் ஆபத் தர்மமாகவும் அனுஷ்டிக்கலாம். சில சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதுபோல துல்யமாய் அவற்றை யனுஷ்டிக்கப்பயந்து பக்தி செய்வதை விட்டுவிடப்படாது. ஆச்சாரஹீனம், தந்திரஹீனம், பக்திஹீனம் இவற்றைப் பொறுத்துக்கொள்ளச்சொன்னால் ஈச்வரன் பொறுத்துக்கொள்வார்.

சில பக்தர்களின் சரித்திரங்களால், பக்தி செய்வதில், மனோதர்மம்தான் பிரதானம், அதாவது உள்ளன்பும் சிரத்தையும் தான் கடவுளுக்குப் பிரியத்தையுண்டாக்குமென்று நாம் நன்றாய்த் தெரிந்துகொள்கிறோம். சில நூல்களில் விதித்துள்ளபடி ஸ்தல சுத்தம், தேக சுத்தம், வஸ்திரசுத்தம், பூஜாசாமான்களின் சுத்தம், இவற்றை அதித்துல்யமாய்ச் செய்யமுடி

யாதென்று பயந்து பக்தி செய்வதை விட்டுவிட்டவன் கதி என்னுகும்! அவன் எப்படி நல்வழிக்கு வருவது? கால தர்மமோ, பயத்தையும் ஏக்கத்தையும் சதா உண்டு பண்ணிக்கொண்டே யிருக்கிறது. பெரும்பான்மை யோர் ஈச்வரத்யானம் கொஞ்சநேரங்கூடச் செய்யாமல், ஒரு அற்ப பக்தி சாதனமும் இல்லாமல், முன்னேர்கள் அனுஷ்டித்துவந்த அனுஷ்டானங்களை விடுவதே நாகரீகமென்று பெருமைகொண்டு, அல்லும் பகலும் உலக விவகாரங்களில் அதுவும் நிஷ்பிரயோஜனமான விருத்திகளில், மனதைச் செலுத்திவருகின்றனர்.

மனது சரீரத்திற்கும், வஸ்திரத்திற்கும், ஸ்தலத்திற்கும் மேலான வஸ்து; சிரத்தையும், உள்ளன்பும் அதை உடனே சுத்தப்படுத்திவிடுகிறது. மற்றவற்றை, தனக்கேற்பட்ட சக்திக்கும் காலத்துக்கும் சௌகரியத்துக்கும் தக்கபடி, சுத்தப்படுத்திக்கொண்டாற் போதும். இவ்விஷயத்தை மேலான சாஸ்திரங்கள் வற்புறுத்திக்கூறுகின்றன. ஆசார நியமங்களை அதித்துல்யமாயும் திட்டமாயும் அனுஷ்டித்து பக்திசெய்ய சாத்தியமாக்கிக் கொண்டவர்கள் அவ்வாறே செய்யட்டும். நாம் அவர்களைத் தடுக்கவாவது அவர்கள் நம்மைத்

தடுக்கவாவது நியாயமில்லை. தன்னைச் சுற்றியுள்ளவற்றையும் தான் உபயோகிக்கும் பொருள்களையும் அதிக சுத்தமாய் வைத்துக்கொள்வது பிசகென்று ஒருவரும் சொல்லமாட்டார்கள்.

ப. முனிக்கரசே! உம்முடைய அரிய தபசைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். எப்பொழுதும் ஆத்மநிஷ்டையிலிருப்பவரும், நிர்மலமான புத்தியுள்ளவரும் காலதேசங்களைத்தாண்டி அப்பாலுக்கப்பாலாய்நிற்கும் வஸ்துவாயிருப்பவரும், சுத்தஞானமே உருவாய்த் தோன்றிநிற்பவரும் நீரே! உம்முடைய வாக்கிலிருந்து உதிப்பதெல்லாம் வேதம். அவையெல்லாம் ஸத்தியம். நீர் காட்டிய வழியிற்செல்லச் சித்தமாயிருக்கிறோம்.

என் கூட வந்திருக்கும் நண்பர்களில், அவரவர் குலாச்சாரப்படி ஒருவர் சிவபக்திசெய்யவேண்டியவராயும், இன்னொருவர் கணேச உபாசனை செய்யவேண்டியவராயும், வேறொருவர் சுப்பிரமணியக் கடவுளையும், பிறிதொருவர் சக்தியையும் உபாஸிக்கத் தக்கவராயும் இருக்கின்றனர். அவர்களுக்கும் உபதேசம் செய்யத் திருவுளங்கொள்ளவேண்டும்.

மு. அன்பர்களே! கடவுள் ஒருவரே! எல்லாத் தேசங்களிலும் எல்லாக்காலங்களிலும் பல வேறு நாம ரூபங்களோடே பிரசன்னமாய்க் காக்ஷிதந்து ரக்ஷிக்க வந்தவர் அவரே? அவரவர் குல சம்பிரதாயப்படி அவ்வவ் மூர்த்தமாய் பக்தி செய்பவர்களுக்கு "என்" என்று கேட்பவர் அவரே! நம்முடைய அநாதியான வேதங்கள் பன்முறையும் இந்த உண்மையை வற்புறுத்திக் கூறுகின்றன.

"ஓம்நம: சிவாய" என்றும் "சிவ" என்றும் சிவ குலத்தவர் ஜபிக்கலாம், பூஜிக்கலாம். அதன் அருத்தம் என்னவெனில் "பிரணவ (ஞான) ஸ்வரூபியாகிய சிவனுக்கு நமஸ்காரம்." அதாவது ஞான ஸ்வரூபத்தினிடத்தில் அகங்காரத்தையும், மமகாரத்தையும் ஒப்புக்கொடுத்தேன், என்பது அதன்பொருள். இந்த ஸ்தூல பஞ்சாக்ஷரமும் (ஓம் நம: சிவாய,) சூக்ஷ்மம பஞ்சாக்ஷரமும் (சிவ,) மஹாவாக்கியங்களாகும். "ஓம் நமோ நாராயணாய" என்பதற்கு 'பிரணவ ஸ்வரூபியாகிய நாராயணனுக்கு நமஸ்காரம், என்றர்த்தம். அதாவது ஆதிமூலமாய் சகலத்தையும் கடந்து அப்பாலாயிற்கும் ஞான ஸ்வரூபத்திற்கு 'நான்' என்ற அகங்கார

மும், 'எனது' என்ற மமகாரமும், அர்ப்பணம் செய்யப்பட்டன என்று பொருள்.

"ஓம் ஸ்ரீ கணேசாயநம:" என்று கணபதி உபாஸகர் தபஸ் செய்யலாம். **"ஓம் சரவணபவ," "ஓம் நமோகுமாராய"** என்ற சடாக்ஷரங்களை உச்சரித்து கௌமார சமயிகள் பக்தி செய்யலாம்.

"ஓம் நம: சிவாயை" என்றும், **"ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் பராசக்தியை நம:"** என்றும் **"ஓம்ஹ்ரீம் ஸ்ரீம் ஸ்ரீமாத்ரே நம:"** என்றும், **"ஓம்ஹ்ரீம் ஸ்ரீம் ராமாயைநம:"** என்றும், சக்தி உபாஸகர்கள் உச்சாடனம் செய்து பக்தி செய்யலாம்.

ஒவ்வொருவரும் ஒரே மந்திரத்தை எடுத்துக் கொண்டு அதையே கடைப்பிடியாய் உபாஸித்து வரவேண்டும். ஜபம் வரவர அதிகமாய்க்கொண்டே வரவேண்டும், அந்தியகாலத்தில் அதாவது விருத்தாப்ய தசையில் அவ்வவ் மந்திரம் மானஸீகமாய், தயிலதாரை போல் ஜபிக்கப்பட சாத்யமாகும். எல்லா மந்திரங்களுக்கும் சமமான மகாத்மியம் உண்டு. இந்த மந்திரங்கள் ஒவ்வொன்றும் மகாவாக்கியந்தான்.

சிவ சகஸ்ரநாமம், விஷ்ணு சகஸ்ரநாமம், கணேச சகஸ்ரநாமம், சுப்பிரமணிய சகஸ்ரநாமம், லலிதா சகஸ்ரநாமம்; புருஷஸூக்தம், ஸ்திரீஸூக்தம், ருத்திரம், ஆதித்ய ஹிருதயம்; திருப்புகழ், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருவாய்மொழி, ஆகிய இவற்றையும் அடிக்கடி பாராயணம் செய்து வரலாம். அதுவும் மகத்தான தபசாகும், சகல பாக்கியங்களையும் தரும். பக்தர்களின் சரித்திரங்களையும், விதிக்கப்பட்ட இதிகாசங்களையும் புராணங்களையும் அவ்வப்போது சிரவணம் செய்யலாம்; அல்லது தாமே வாசிக்கலாம்.

பக்தி செய்து ஒவ்வொருவரும் தெய்வ பலத்தைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்பது தான் நமது கொள்கை.

நான்காம் அத்தியாயம்.

யோகம் (லக்ஷணம்-பலன்).

யோகப்பிரியன். ஸ்வாமீ! எவராயிருப்பினும் அவருடைய சந்தேகங்களைக் களைந்து, அவர் மன முவந்து

திருப்தியடையத்தக்க விடைகளை யளிக்கும் உத்தம புருஷர் நீர் ஒருவரே என்றும், அதுவும் கேவலம் அனுபவத்திலிருந்து சகல உண்மைகளையும் உணர்ந்து கொண்ட ரிஷிசிரேஷ்டர் என்றும் கேள்விப்பட்டு இங்கு வந்தேன்.

சாஸ்திர ஞானமட்டும் உள்ளவர்கள் எனக்கு சமாதானம் சொல்ல முடியவில்லை. கிராமபோன் போல் கற்றதைக் கற்றபடி ஒப்பிக்கின்றனர். அதனால், வாய் வேதாந்தம் நம்மை ரக்ஷிக்காது என்ற புத்தி எனக்கு உண்டாகிவிட்டது. நான் ஆங்கிலபாஷையை அகலக் கற்றவன்; புறச்சமயங்களை வெகுவாய் ஆராய்ந்தவன்; சிலகாலம் நாஸ்திக புத்தியோடு இருந்தவன்; தேச நலத்திற்காக அறவே முற்றத்துறந்தவன். கடவுளைப்பற்றியும் என்னைப்பற்றியும் உள்ள உண்மைகளைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கொஞ்ச காலத்திற்கு முன் என் புத்தி தத்துவ ஞான ஆராய்ச்சியில் திரும்பியது. நம்முடைய சாஸ்திரங்கள் மட்டுந்தான் உண்மையை சாதனத்தால் அன்றி வேறொன்றினாலும் தெரிந்துகொள்ள முடியாது என்கின்றன. தன்னை யறியவும் கடவுளை யறியவும் சாதனம்

அவசியம் என்று ஐரோப்பியரின் (அமெரிக்கரும் சேர்ந்து) தத்துவ சாஸ்திரங்கள் சொல்லவில்லை. கல்வித் திறமையும் புத்திக்கூர்மையும் உள்ளவர்கள் தர்க்க ஞானத்துக்கு ஒத்த சில சித்தாந்தங்களை யேற்படுத்தி அவற்றைத் தத்துவசாஸ்திரங்கள் என்று சொல்லுகின்றனர். அவர்களிலும் பல கக்ஷிகள் இருக்கின்றன. ஒரு சக்ஷியுங்கூட கடவுள் இருக்கிறார், அவர் ஒரு புருஷர் என்று ஒப்புக்கொள்வதில்லை. கிறிஸ்துவை அப்பாலார் ஒப்புவதில்லை.

நான் இரண்டு வருஷங்களுக்கு முன் பிராணயாமத்தை அப்யாசித்தேன். அதனால் தேகத்துக்கும் மனதுக்கும் சுகமுண்டாய்க்கொண்டே வந்தது. பிறகு கணேச உபாஸனை செய்தேன்; அதனால் நல்ல சுவையுள்ள ஆகாரங்கள் கிடைத்தன; பணம் அதிகம் கிடைத்தது; ஆத்ம விசாரத்திலும் சிரத்தை விருத்தி யடைந்தது. பிறகு ஆஞ்சநேயரை உபாஸித்தேன்; அதனால் எனக்கு விரோதிகளாய் இருந்தவர் சிக்ஷை யடைந்தனர்; அவர்களுக்கு என்னைக்கண்டால் பயம் உண்டாயிற்று; அவர்களில் சிலர் (முன்) துர்த்தேவதைகளை ஏவிவிட்டதால் நேர்ந்த துன்பங்கள் என் குடும்பத்தை விட்டுவிலகின; அத்துன்பங்கள், செய்த அவர்களுக்குப் பதின் மடங்காய்ப் போய்ச் சேர்ந்தன.

அதின்மேல், இவ்வுலக வாழ்க்கைக்குரிய பற்றுகளை யெல்லாம் விட்டுவிட்டுக் கிளம்பினேன்; அல்லும் பகலும் தபஸ் செய்துகொண்டு வந்தேன்; காயத்திரி மந்திரத்தை பிராணாயாமத்தோடும் தியானத்தோடும் கூடி ஜபித்து வந்தேன்; தேகத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல், சீதோஷ்ணத்தின் கொடுமையைப் பாராட்டாமல், நிர்மானுஷ்யமான ஸ்தலங்களில் இருந்து கொண்டு தபஸ் செய்தேன்; கடவுள் ஒவ்வொரு வேளை அன்னம் தினம் அதிச்சையாய்க் கொடுத்துவந்தார்; நிசி வேளையில் பயங்கரமான இடங்களில் சஞ்சாரம் செய்யும்பொழுது பல ஆபத்துக்களினின்றும் என்னை ரக்ஷித்துவந்தார்.

காயத்திரிதேவி பிரசன்னமானாள்; அரைமண்டலம் செய்த தபஸே அதற்குப் போதுமானதாய் இருந்தது; 'வேண்டிய வரத்தைக்கேள்' என்றபோது எனக்கு முக்தி வேண்டுமென்றேன்; அது உனக்கு அவசியம் சித்திக்கும் என்றாள்; அந்த விக்கிரகத்தைப் படங்களிலும் ஆலயங்களிலும் நான் முன் பார்த்திருந்ததில்லை; நடுப்பகலில் கண்ணைமூடிக்கொண்டு தியானம் செய்தபொழுது அவள் தேகம் பிரத்யக்ஷமாயிற்று; கண்ணைத்

திறந்தபொழுது அது மறைந்தது; மறுபடியும் கண்ணை மூடினால் பிரத்யக்ஷமாயிற்று; அதற்குக் காரணமென்ன வென்றுகேட்டேன்; 'நாங்கள் தபோலோகத்தில் உள்ள வர்கள்; எங்களுடைய சரீரத்தில் பிருதிவி சத்தும் ஜல சத்தும் மிகக்குறைவு; சாந்தமான தேஜஸோடும் உள் ளது; இம்மண்ணுலகில் உள்ள கொடுமையான உஷ்ண மும் சூரியப்பிரகாசமும் அங்கில்லை; நாங்கள் அதிவேக மாய் சிரமமில்லாமல் ஸப்த லோகங்களிலும் சஞ்சாரம் செய்வோம்' என்றாள்.

அதற்குமேல் அவள் சொல்லியபடி தண்டபாணி யை உபாஸித்தேன்; சில தரிசனங்கள் உண்டாயின; அவரால் சூக்ஷ்மபஞ்சாக்ஷரம் உபதேசிக்கப்பெற்றேன்; அல்லும் பகலும் மானஸீகமாய் அதை ஜபித்ததிலிரு ந்து சித்திகள் ஏற்பட்டன; என் திருப்திக்காக அவற் றை நிஷ்காமியமாய் சில சந்தர்ப்பங்களில் பிரயோகித் தேன்; 'அதுவும் செய்யப்படாது, சங்கற்பத்தோடு சித்திகளைப் பிரயோகம் செய்தால் மறுபடியும் ஜன்ம முண்டாகும்; உனக்கு அந்நியமாய் அவைகள் நடந்தா லும் அவற்றைக் கவனியாதே! என்றார்; அது முதல் அதை நிறுத்திவிட்டேன்.

ஞானதிபதியே! எனக்கு ஞானம் சித்திக்கும் வழியைக் காட்டவேண்டும்.

மு. நண்பனே! நான் ஞானத்தை யடைய வேண்டும் என்று கேட்கிறவனாகிய அந்த "நான்" யார் என்று விசாரி. அதுவே ஆத்ம விசாரம்.

யோ. 'அஹம் பிரம்மாஸ்மி' அதாவது நான் பிரம்மம் ஆகின்றேன்' என்ற விருத்தி ஞானமா? அல்லது, 'தத்துவமஸி'—அது நீ யானாய், என்ற உபதேசத்தை மனனம் செய்தால் ஞானப்யாசமாகுமா?

அல்லது

'பிரஞ்ஞானம் பிரஹ்மா'—'அறிவுக்கறி வாயிருக்கும் பிரஞ்ஞானம் பிரம்மம்; அதாவது பஞ்சபூதங்களாலாகிய சரீரங்கள்யாவும் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு, என்ற அவஸ்தைகளால் பீடிக்கப் பட்டனவாய் நிலையாதன வாயிருத்தலால் அச்சரீரங்களுக்கு அந்நியமாய், சித்ரூபமாய் (அறிவுமயமாய்,) சர்வவியாபகமாய், மாறுதலடைந்துகொண்டேயிருக்கும் நாம ரூபத்தோற்றமாகிய பிரபஞ்சத்திற்கு அதிஷ்டானமாய் (ஆதாரவாகிய மூலமாய்) நிலைத்திருக்கும் ஞானமே பிரம்மம் என்று அறிந்துகொள்வது ஞானமா?

அல்லது

'அயமாத்மா பிரம்மம்'—இந்த ஆத்மா தான் பிரம்மம், அதாவது ஜீவன் என்ற பிரஞ்ஞையாய் நிற்கும் எனது ஆத்மாவே பிரம்மம் என்று உணர்தல் ஞானமா? தேவரீர்! இவற்றைக் குறித்துத் தெளிவுறக்கூறல்வேண்டும்.

மு. அப்பனே! மேற்சொன்னவையெல்லாம் விருத்திகளேயாகும் அதாவது நினைப்புக்களேயாகும். அது நிச்சயம். அவை ஞானப்பிராப்தி அல்லவே யல்ல. அறிஞர் பரிசுத்தமான அதாவது கைவல்யமான ஆத்ம ஸ்வரூபத்தில் ஸ்திர மாயிருத்தலே ஞான மென்கிறார்கள்.

யோ. விருத்தியிலும் பிரஹ்மம் கலந்திருக்க வில்லையா?

மு. குழந்தாய்? நாமரூபமின்றி விருத்தி அதாவது எண்ணம் எங்கிருந்துவரும்? ஸ்வரூபத்திலிருந்தே ஆபாசம் (அறிவாகிய பிரகாசம்) உண்டாகிறது. அந்த சிதாபாசத்தை (மனமாகிய அறிவுப்பிரகாசத்தை)விட்டு விட்டிருப்பதே ஸ்வரூபத்தில் ஸ்திரமாயிருப்பதாகும்; அதுவே ஞானப்பிராப்தி.

சரீரமுள்ளவனுக்கு எல்லா எண்ணங்களும் எங்கிருந்துண்டாகின்றனவோ அந்தஸ்தானமே ஹ்ருதயம். அவ்விருதயத்திலிருந்துண்டாகும் "நான்" "நான்," என்ற அறிவே (ஆத்மப்பிரகாசமே) சகல நினைப்புக்களுக்கும் மூலமாயிருக்கிறது. 'நான்' என்னும் புத்தி எங்கிருந்து கிளம்புகிறதோ அவ்விடம்தான் ஹிருதயம்.

'நான்' யார் என்று விசாரித்தால் ஹிருதயத்திற்குப்போகிறான். இதுவே ஆத்மவிசாரம் (உண்மையானது,) அந்த அப்பாசத்தில் மனம் அடங்குகிறது. பிராணன் (சுவாஸம்) கும்பகம் அடைகின்றது; அதாவது உச்வாஸம், நிச்சுவாஸம், ஆகிய இரண்டு இயக்கங்

களும் நின்று விடுகின்றன. ஹ்ருதயத்தில் நிலைபெற்று நின்றுவிட்டால் ஞானம் லபிக்கிறது.

யோ. பிரபு! இது நவீனவழியாயும், சுருக்கமான சாதனமாயும் இருக்கிறது. ஆனால் ஆரம்பத்தில் கஷ்டமான முயற்சியாய் இருக்கிறது. சுவாஸத்தைக் கட்டுவதால் மன மடங்குகிறதை வாசியோகம் அப்யாசித்த காலத்தில் அறிந்தேன். அந்த வழி லகுவாய்த்தோன்றுகிறதே, அதையப்யாசிக்கப்படாதா?

மு. அன்பனே! வாசியோகத்தின் முடிவென்ன?

யோ. வீணாதண்டிலுள்ள (இங்கிலீஷில் ஸ்பைனல் காலம்) ஆறுதாரங்களிலும் இலக்ஷயம் வைத்து ரேசகம்-பூரகம்-கும்பகம், ரீதியாய் யோகாப்யாசம்செய்தேன். அந்தந்த மூர்த்திகள் பிரத்யக்ஷமானார்கள். கடைசியாக பாலை (வாலை) தரிசனமானாள். அதன்பின் விமானதரிசனம் ஏற்பட்டது. வாசிக்குதிரைகள் பிரசன்னமான பொழுது வாமவாசிக்குதிரையும் (பெண்ணும்) தக்ஷிணவாசிக்குதிரையும் (ஆண்குதிரையும்) சண்டையிட்டன. இரண்டும் அடக்கியாள முடியாத அதிதீவிர கதியுள்ள மட்டங்கள்; பெண் சகடத்தோடு பிணைக்கப்பட்டிருந்தது; அதற்குள் தகாதசங்கத்தோடு இருந்து சென்றேன்; ஆண்குதிரையின் முன்கால்கள் தளைக்கப்பட்டிருந்தன; ஆண் வந்து பெண்ணை யெதிர்க்க, அது வண்டியை முறித்துத் தள்ளிவிட்டு ஆணையும் உதைத்துத் தூரத்திவிட்டது; இரண்டும் ஒன்றிற்கொன்று

இசையாதனவாய்ப்போய்விட்டன. முடிவில், குருபாத தரிசனம் கிடைத்தது. அது தான் வாசி யோகத்தின் முடிவு.

மு. நண்பனே! அவ்வளவு தூரம் சென்று பக்குவப்பட்டடைந்த உனக்கு இனிமேலும் யோகாப்யாசம் எதற்கு?

ஆறு ஆதாரங்களில் கடைசியாயுள்ளது சகஸ்ராரம், அதாவது ஆஞ்ஞாச்சக்கரம் (ஸகஸ்ரதளபுஷ்பம் அதுவே புத்திக்கு இருப்பிடம். 'நான்' என்னும் ஜீவ பாவம், அதையொட்டியே இருக்கிறது. அதைவிட்டு ஹ்ருதயத்திற்குச் சென்று, அதிலேயே நிலைத்து நின்றால் ஸ்வரூபதரிசனம் லபிக்கும். அதுவே ஞானப் பிராப்தி.

ஹிருதயம் அனாஹதச்சக்கரம் அல்ல. இரத்த பிண்டமும்(ரக்தாசயம்)அல்ல. இது மார்பின் இடப்பக்கமிருக்கிறது. இதையே தப்பாக ஐரோப்பியர் ஹ்ருதயம் (ஹார்ட்) என்கின்றனர். ஞானஸ்தானமாகிய ஹிருதயம் மார்பின் வலப்பக்கமிருக்கிறது. ஸுஷும்னநாடி அதை ஆச்ரயித்திருக்கிறது. அதற்கு ஆத்மநாடி என்றும், அமிர்தநாடி என்றும், பெயர்கள் உண்டு

ஹ்ருத் + அயம் = ஹ்ருதயம். ஹ்ருத் = மூலம், அயம் = இது; ஹ்ருதயம் என்னும் பதச்சேர்க்கையினால், ஆத்மரூபமே ஹ்ருதயம் எனப்படுகிறது. ஹ்ருதய ஸ்தானத்திலிருந்து சுழுமுனை (ஸுஷும்ன) நாடி

வழியாக ஜோதியாகிய ஆத்மப்பிரகாசம் ஸஹஸ்ராரத்திற்குப்(மூளைக்கு) போகின்றது. அந்த ஜோதி(அறியும் தன்மை) மூளையிலிருந்து தசேச (பத்து)ந்திரியங்களின் வழியாய் தேகத்திலெல்லாம் வியாபிக்கின்றது. அப்பொழுது அனுபவங்கள் உண்டாகின்றன.

மனிதன் அவ்வனுபவங்களை ஆத்மப்பிரகாசத்தைக் காட்டிலும் வேறென்று எண்ணுவானுனல் சம்சாரத்தில் பந்தமடைகின்றான்.

யோ. புருஷோத்தமா! ஹ்ருதயத்தில் நிலைபெற்ற ஞானிக்கு ஸகஸ்ரார (மூளையின்) விருத்திகள் நசிக்குமா; நசித்தவிடத்தில் அவன் ஒருவிவகாரமும் செய்ய முடியாதவனும் மௌனமுற்று செத்தவன்போல் கிடக்க வேண்டியதுதானே.

மு. புத்திமானே! மூளையையும், ஹிருதயத்தையும் ஒன்றாக்கிக்கொண்ட ஞானி ஸகஜஸ்திதிக்கு வந்துவிடுவான். அவன் விவகரித்துக்கொண்டிருக்கும் பொழுது ஸமாதியிலேயே நிற்பவனுவான். ஸகஜஸ்திதியுள்ள ஞானியின் ஸகஸ்ராரம் சுத்தமான ஜோதிஸ்வரூபமாய்விடும். சந்நிதி பலத்தினால் மூளையில் உற்பத்தியாகும் ஸங்கல்பங்கள் (சரீரத்தையனுசரித்து மாத்ரமே யுள்ள பிராரப்த கர்மாவின் பலத்தாலுண்டான எண்ணங்கள்) ஜீவிக்கா. அதாவது அந்த ஞானியினிடத்தில் உயிர்த்திருக்கமாட்டா; நிர்வாசனையாய்விடும்.

அவன் மனம் சந்நிதி விசேஷத்தால் உலகவிஷயங்களை யறிந்து கொண்டிருந்தாலும் பேதத்தை உட்கொள்ளாமல் இருக்கும். விகாரங்களுக்கு அந்நியமாயிராமலே ஸ்வரூபமாயிருக்கும்: அவன் ஸ்வரூபாகாரமாய் கெம்பீரமாயிருப்பான், பிரபஞ்சத்தைப் பொய்யென்று நினையான், அது தன்னைவிட வேறே யென்றும் நினையாதவனுயிருப்பான்.

ஐந்தாம் - அத்தியாயம்.

ஞானம்—(லக்ஷணம்—பலன்).

(நாடிக் கிரந்திகள்.)

யோ. யோகிகளில் உத்தமயோகியாயும் ஞானிகளில் உத்தம ஞானியாயும், சாஸ்திர ஞானத்தினுல் மட்டும் (ஸ்வரூப சாக்ஷாத்கார வனுபவம் இல்லாமல்) வேதாந்தியாய் விட்டோம் என்று வாதாடிக் கர்வித்துத் திரியும் யானைகளுக்குப் பயங்கரமான ஸிம்ஹமாயும், கபடமற்ற பக்தர்களுக்குத் தஞ்சமாய் அபயாஸ்த மளிக்கும் இன்பமே!

சித்தர் நூல்களிலிருந்தும், ஐரோப்பியர் புலனறிவை ஆதாரமாகக்கொண்டு கண்டுபிடித்திருக்கும்

சாஸ்திரங்களிலிருந்தும், நாம் அறிந்து கொண்டபடி சரீரத்திற்கு அதிஷ்டானமாய் இருப்பது நாடிகளின் கூட்டம் (நெர்வஸ் ஸிஸ்டம்). அந்நாடிச்சேர்க்கையில் ஆங்காங்கே கிரந்திகள் (நெர்வஸ் காங்க்லியா,) அதாவது நாடிமுடிச்சுகள் உள்ளன. அறிவிற்கும் ஞான உணர்ச்சிக்கும் அவையே ஆசிரயமாயிருக்கின்றன. அக்கிரந்திகளுக்கும் ஆத்மாவிற்கும் என்ன சம்பந்தம் தயவுசெய்து சொல்லவேண்டும்

மூ. அண்டத்தின் அம்சங்களும் லக்ஷணங்களும் பிண்டத்தில் அதாவது சரீரத்தில், முற்றிலும் நிசேஷமாக அடங்கியுள்ளன. பிண்டமாகிய சரீரத்தின் சகலாம்சங்களும் இலக்கணங்களும் நிசேஷமாய் ஹிருதயத்திலடங்கியிருக்கின்றன. ஆதலால் அண்டத்தின் 'ரூப ஸங்கிரகம்' ஹ்ருதயமாகிறது. அண்டமத்தனையும் ஹ்ருதயத்திலடங்கியிருக்கிறது.

சகல புவனங்களும் மனதிற்கு அந்நியமாயில்லை. அம்மனமும் ஹ்ருதயத்திற்கு அந்நியமல்ல. ஆகையால் சகல பிரபஞ்சச் சரித்திரமும் ஹ்ருதயத்தில் துவக்கி ஹ்ருதயத்தில் முடிகிறது.

தேகத்தில் 'ஹ்ருதயம் சூரியமண்டலமாயும்' ஸகஸ்ராரம் (மூளை) சந்திரமண்டலமாயும் இருக்கிறது. ஸுஷும்ன நாடி வழியாகக்கிளம்பும் சிதாபாசமாகிய (ஆத்மபிரகாசமாகிய) மனம் சந்திரபிம்பம்போல் மூளையை ஆசிரயித்திருக்கிறது. ஜோதியை (அறியும்சக்

திரை) ஹ்ருதயமாகிய சூரியன் சந்திரனாகிய மனத்திற்குக் கொடுக்கிறது. ஹ்ருதயமும் ஆக்ஞாவும் அதாவது ஆன்மாவும் மனமும் ஒன்றாய் ஐக்யமாதலே ஞானம்.

சரீரமாகிய ஜடத்துக்கும் 'நான்' என்ற அறிவு தனியே இல்லை. பிணத்தைப் பார்த்து இதைத் தெரிந்துகொள்கிறோம். சுத்தச் சைதன்யமாகிய ஆன்மாவுக்கும் 'நான்' என்ற பிரஞ்ஞை (அகங்காரம்) தனியே இல்லை. சரீரம், ஆத்மா ஆகிய இவ்விரண்டின் சம்பந்தம் தான் கிரந்தி (நாடிமுடிச்சு) என்றாகிறது. தேகத்தோடு ஆன்மா சந்திக்கும் பொழுதுதான் சரீரத்தை ஒட்டிய அறிவுண்டாகிறது. ஸ்வரூபத்தினின்று உதிக்கும் சக்தியாகிய பிரகாசத்தினால் தேகத்தின் சலனங்கள் நிகழ்கின்றன.

நித்திரை. மூர்ச்சை, அதிதுக்கம், அதிசந்தோஷம் ஆவேசம், அதிபயம் முதலிய காரணங்களினால் மனோவிருத்தி அடங்கும்பொழுது சரீரப்பிரஞ்ஞை இல்லாததினாலும், ஆனால் ஜீவன் (பிராணன்) தேகத்தை விட்டு முழுதும் நீங்கிவிடாததினாலும் ஜீவபாவமாகிய அறிவு (ஆன்மப்பிரகாசம்) தன்னிடமாகிய ஹ்ருதயத்தில் அவ்வியக்தமாய் அடங்கியிருக்கிறது என்று தெரியவருகிறது. பாமரனுக்கு ஹ்ருதயத்தின்சம்பந்தம் தெரியாது. யோக ஸமாதியிலோ நன்றாய்த் தெரியும்.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வதென்ன? மனமானது ('நான்' என்ற பிரஞ்ஞையானது) இரண்டு

காரணங்களால் அதாவது இருவழியாக ஹிருதயத்தில் ஐக்யப்படுகிறது. நித்திரை மூர்ச்சை முதலிய அவஸ்தைகளில் திடீரென்று அடங்குவதொன்று. அப்பொழுது சாதாரண மனிதனுக்கு ஒன்றும் தோன்றுவதில்லை. மற்றொன்று தியான ஸமாதியை (நிஷ்டையை) அனுசரிப்பதினால். அப்பொழுது ஞானிக்குப் பிரஞ்ஞானமாயிருக்கிறது. அதுவே விஞ்ஞானம் எனப்படுகிறது.

பாமரன் ஹ்ருதயத்தை அறியாதவனாய் மனத்தை மாத்திரம் காண்பது அதாவது நான் வேறு, பிரபஞ்சம் வேறு ஈச்வரன் வேறு என்று நினைப்பது, சூரியனுடைய பரோக்ஷத்தில் (சூரியன் இல்லாதபொழுது, இரவில் சந்திரபிம்பத்தை மாத்திரம் காண்பது போலிருக்கிறது. சந்திரனுக்கு சுயம் பிரகாசமில்லையென உண்மையறிந்தவனுக்கு மாத்திரம் தெரியும். அதுபோல ஹ்ருதயத்தின் சாயையே (நிழலே) மனமென்று (அகம்பிரஞ்ஞை என்று) அபக்குவி தெரிந்து கொள்வதில்லை.

அவன் ஜோதிக்கு மூலமும் அத்துவதைமாய் நித்யமாயிருப்பதுமான ஆன்மாவின் ஸ்வரூபத்தைக்

காணாதவனாய் பிரபஞ்சமாகிய தோற்றத்தை உண்மையென்றெண்ணி துக்கமடைந்து அழிகிறான். கயிற்றைப் பாம்பு என்றெண்ணி மூர்ச்சை யடைவதை இது ஒக்கும்.

முக்தனோ வென்றால் ஸ்வரூபாகாரமாயிருந்து கொண்டு, பகலில் சூரிய வெளிச்சத்தில் மங்கியுள்ள சந்திரனின் நிலவைப்போல் மனதை மதிக்கிறான். கானல் ஓட்டம் ஜலமல்லவென்று தெரிந்துகொண்டவனுக்கும் கானல் பிரவாகம் தோன்றிக்கொண்டேயிருப்பது போல் ஞானிக்கு சாயாரூபமான பிரபஞ்சம் தோன்றும். அதின் நிமித்தம் சந்தோஷத்தையே, துக்கத்தையோ அடையான். ஸ்வப்னம் காண்கிறோம் என்ற ஞாபகத்துடன் பிரபஞ்சத்தை ஸ்வப்னமாகக் காண்கிறான். சமுத்திரக் கரையிலே சதா சஞ்சரிக்கிறவன் அலையின் கோஷத்தில் மனதைச் செலுத்தான்; அது போல ஜீவன்முக்தன் தன் சந்நிதியில் நடக்கும் பிரபஞ்ச விவகாரங்களை லக்ஷியம் செய்யான்.

யோ. ஞான ஸாகரமே! நிர்விகல்ப ஸமாதிக்கும், ஸகஜ ஸ்திதிக்கும் என்ன பேதம்?

மு. அன்பனே! அனுபவம் பூர்ணமாய் வந்தகாலத்தில் இந்த சந்தேகங்கள் உண்டாகா. பதங்களிவ் பேதத்தைக் கற்பிக்கிறதே யல்லாமல் உண்மையில் ஒரு பேதமும் இல்லை. ஆனால், யோக சாதனத்தில் மனம் லயப்பட்டிருப்பதை நிர்விகல்ப ஸமாதி யென்று சிலர் தப்பாக அபிப்பிராயப்படுகின்றனர். அப்படி அடங்கின

மனது மறுபடியும் கிளம்பும். அப்பொழுது ஸமாதி கலைந்ததென்று எண்ணம் உண்டாகும். சில சமயங்களில் சரீரப் பிரஞ்ஞை ஏதோ ஒரு நிமித்தத்தினுல் கழன்று சுற்றி நடக்கும் விவகாரங்கள் புலப்படாதிருக்கும், அப்பொழுதும் நாம் இருக்கிறோ மென்ற பிரஞ்ஞையிருக்கும்; அதுவும் நிர் விகல்ப்ப ஸமாதியல்ல

தன்னைச் சுற்றிலும் நடந்துகொண்டிருக்கும் விவகாரங்களில் (அதற்கென்ற பிரயத்னம் இல்லாமலே) பற்றுது, மனம், ஸ்வரூபத்தில் ஒற்றுமைப்பட்டு பரம சுகத்தில் ஆழ்ந்திருக்கும் பொழுது, விவகார ஸ்பரிஸம் இல்லாத்தினுல் மட்டும் ஸகஜ ஸ்திதியில் இல்லை யென்றெண்ணலாகாது.

ஆன்மாவிற்கு அந்நியமான விஷயங்களிலிருந்து விலகிய ஞானஜ்வாலை ரூபமாகிய சுப்ரவ ஸ்திதியே 'ஸகஜ ஸ்திதி' எனப்படும். விஷயங்களை அறியும் காலத்தும், விவகாரங்களை நடத்தும் காலத்தும், அத்துவைத புத்தி அசையாமல் திடமாய் ஏற்பட்டிருப்பதுதான் ஸகஜ ஸ்திதி. அந்த ஸ்திதியில் பயமோ, சந்தேகமோ, உண்டாகாது. சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து, மனம் நிர்விகல்ப்பமாய் நிற்கும் ஸ்வரூபத்துடன் கலந்து நிற்பதே ஸகஜ ஸ்திதி. அதுவே ஞானம்.

யோ. ஸ்வாமீ! சித்தர்களுடைய மார்க்கத்திற்கும் ஞானிகளின் மார்க்கத்திற்கும் என்ன பேதம்?

மு. அப்பனே! சரீரத்தை காயகற்பத்தால் சுத்தி பண்ணி அரிய தவம் செய்து பெரிய சித்திகளை சம்பாதித்துக்கொள்பவன் அந்த சரீரத்தையும் சித்திகளையும் அழிவில்லாத நித்ய வஸ்துக்களாக ஆக்க முடியுமா? நித்திய வஸ்து ஒன்றே உளது. அது தான் ஞானம். ஸகஜ ஸ்திதியடைந்தவன் சரீரம் சித் சரீரமாகும். காந்த சக்தி பூர்ணமாய் வியாபித்த எஃகுத் துண்டைப் போல் இருக்கும்.

ஞானம் வேறே, சக்தி வேறே, சித்தி வேறே யென்று நினைப்பது அறியாமையாகும். சர்வ சித்திகளும், பராசக்தியும் ஞானத்தையே அதிஷ்டானமாகக் கொண்டுள்ளன. ஸகஜ ஸ்திதி, அதாவது, ஆன்மாகாரமாயிருப்பது தவங்களுக்கு எல்லாம் மேலான தவம்.

அந்த ஞானிக்கு மனமும் தேகமும் ஜடக் கருவிகளாகி விவகாரங்களை நடத்தும். அவன் கேவலம் சாக்ஷியாய் (திருஷ்டாவாய்) நிற்பான். அவனுக்கு அந்த விவகாரங்களும் ஸமாதியே ஆகும்.

யோகநாதன்.

184263
சென்னை-600

சுந்தர விலாஸ் அச்சுக்கூடம்:—வேலூர்.

ஆத்ம-வித்யா-சாதனம்.

	ரூ	அ.	ப.
கலியும் தபசும்	0	0	6
ஆசிரம தர்மம்	0	0	6
ஆத்ம சக்தியைப் பெறவழி	0	0	6
ஆத்ம-வித்யா-சாதனம்	0	4	0

யோகநாதன்,

திருவண்ணாமலை,

தமிழகம்-பக்தஜன-ஸமிதி.

நிர்மிக்கும் காரியதரிசி.